# புலமைக்கதிர் 5

## மாதிரி வினாத்தாள்- 2020


மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-2020


**1** **பத்திரம் I**


சுட்டெண் :..........................................


45 நிமிடம்


* 1ம்,2ம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவிற்குப் பொருத்தமான உருவைக்கண்டு அதன் கீழ் கோடிடுக?


01. 


1. 


2. 

3. 


02. 

1. 

2. 

3. 


* முதலில் தரப்பட்ட கோலத்திற்கேற்ப அடுத்து வரும் கோலத்தைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக?

03. 


(கத்தரிக்கோல்)



(சாந்தகப்பை)




(மட்டப்பலகை)




(தீதாள்)


1. AB, DC 2. AC, BD 3. BC, AD

04. 


(சீப்பு)



(பற்தூரிகை)



(தொலைபேசி)



(கணினி)

1. AB, DC 2. AC, BD 3. BC, AD

* பொருத்தமற்ற சொற்கள் உள்ள கூட்டத்தை தெரிவு செயக?

05.

| 1. | 2. | 3. |
|---|---|---|
| கடல்<br>தோணி<br>செம்படவன் | விவசாயி<br>வயல்<br>கலப்பை | எழுத்தாளன்<br>பேனை<br>மைதானம் |

06.

| 1. | 2. | 3. |
|---|---|---|
| செவ்வாய்<br>புதன்<br>வியாழன் | இனிப்பு<br>புளிப்பு<br>சுவை | மா<br>பலா<br>வாழை |

* இக்கவிதையை வாசித்து வினாக்களுக்கு உரிய விடையைத் தெரிவு செய்க?

காற்று நன்றாய் அடிக்குது
காகம் மேலே பறக்குது
ஆற்றலோடு அலைகளும்
அடித்தடித்து அழைக்குது

07. இக்காட்சிகளை காணக்ககூடிய சரியான இடம் எது?

1. நீர்வீழ்ச்சி 2. குளக்கரை 3. கடற்கரை

08. “நிமல் சிறுகக்சிறுக சேமித்தபணம் அவனுடைய கல்வித் தேவைக்கு உதவியது” இதற்குப் பொருத்தமான பழமொழி?

1. சிறுதுளி பெருவெள்ளம்
2. தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்
3. உப்பிட்டவரை உள்ளவும் நினை.

09. “அழுதபிள்ளை பால் குடிக்கும்” என்பதற்குப் பொருத்தமான வேறொரு பழமொழியைத் தெரிவு செய்க?


1. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
2. அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும்.
3. ஆறிய கஞ்சி பழங்கஞ்சி.

10. “இவ்வுரு உணர்த்தும் கருத்து யாது?




1. வட்டமாகச் செல்லுதல் என்பதாகும்.
2. மீள்சுழற்சிக்கு உட்படுத்தலாம் என்பதாகும்.
3. வலப்பக்கமாகத் திரும்ப வேண்டும் என்பதாகும்.

11. கீழே தரப்பட்டுள்ள உருக்களில் அரைவாசியாக் காட்டும் உருக்கள் எவை?




1. Aயும் Dயும் 2. Aயும் Bயும் 3. Aயும் Cயும்

12. தரப்பட்டுள்ள உருக்களில் $^1/_4$ யைக் காட்டும் உரு எது?




1. 2. 3.

13. இன்று வெள்ளிக்கிழமை நாளை மறுதினத்திற்கும் கடந்த திங்கட்கிழமைக்கும் இடையிலான நாட்கள் எத்தனை?

1. 5 2. 6 3. 7


* கோலத்திற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்களை எழுதுக?

14.




1. 32 2. 40 3. 45

15.




1. 4 2. 18 3. 36

* கீழே தரப்பட்டுள்ள தந்தியைக் கொண்டு வினாக்களுக்கு விடைதருக.

**பங்குனி 11, 2020.**

**அண்ணா ,**

**நான் வருகின்ற மாதம் ஊருக்கு வருவேன்.**

**- கமலன்**

16. இதன்படி கமலன் எப்போது ஊருக்கு வருவான்?

1. மே 2. ஏப்ரல் 3. மார்ச்

17. இக்கடிதம் எழுதியவர், கடிதம் அனுப்பியவருக்கு என்ன உறவுமுறை?

1. அண்ணன் 2. தம்பி 3. அக்கா

18. ரூ. 372.50 ஐ **R. SQP. CM** எனக் குறிக்கப்படுமாயின் ரூ. 1342.75 குறிக்கப்படும் முறை.

1. R. NSQP. QC 2. R. NSTP. QM 3. R. NSTP. QC

19. இருபக்கமும் சமமாக உள்ள விடைத் தொகுதியை தெரிவு செய்க?

1. 34K2267 - 7622K43
2. 3554763 - 3554672
2. 3K3E4CT - 3K3E4CT

* ஓட்டப்போட்டியில் மாணவர்கள் ஐந்துபேர் ஓடிமுடித்த நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன?

- சது - 7 நிமிடம்
- நிது - 6 நிமிடம்
- மது - 5 நிமிடம்
- ரது - 8 நிமிடம்
- மிது - போட்டியை நிறைவு செய்யவில்லை.

20. மாணவர்கள் வெற்றிக் கம்பத்தை அடைந்த ஒழுங்கு முறை?

1. மது, நிது, சது, ரது
2. ரது, சது, மிது, நிது
3. சது, மது, ரது, மிது

21. இப்போட்டியில் முதலாவதாக வந்தவர் யார்?

1. மது 2. ரது 3. சது



22. மேலே உருவில் அதிகமாகக் காணப்படுவது?

1. கதிரை 2. மேசை 3. தளபாடம்


23. மைதானம் ஒன்றில் மஞ்சள், நீலம், சிவப்பு, எனும் ஒழுங்கில் 24 கொடிகள் நடப்பட்டுள்ளன. 20வது கொடியின் நிறம் யாது?

1. நீலம் 2. சிவப்பு 3. மஞ்சள்

24. கமலின் வயது6 வருடங்களாக இருக்கும் போது நிமலின் வயது 9 வருடங்கள் ஆகும். நிமலுக்கு 15 வயதாகும் போது கமலின் வயது யாது?

1. 9 2. 13 3. 12


திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---


25. 


உருவிலுள்ள சதுரங்களின் எண்ணிக்கை யாது?


1. 18
2. 19
3. 21

26. சதுரவடிவமான தாள் ஒன்றை நான்காக மடித்து இரண்டு துளைகள் இடப்பட்டுள்ளன. இதனை விரிக்கும் போது தோன்றும் உரு.



1 

2 

3 

27. நிதர்சன் **1m 20cm** நீளமான கம்பித்துண்டொன்றை சம (சரி) பாதியாக இரண்டுதுண்டுகளாக வெட்டி ஒரு துண்டினால் சதுரம் அமைத்தான். சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?

1. 40cm 2. 20cm 3. 15cm

28. எஞ்சிய துண்டினால் சமபக்க முக்கோணி ஒன்றை அமைத்தன். அச்சமபக்க முக்கோணியின் ஒருபக்க நீளம் யாது?

1. 40cm 2. 20cm 3. 15cm

29. **A, B, C** என்பன மூன்று கம்பித்துண்டுகள் ஆகும். **B** கம்பித்துண்டு **A** கம்பித்துண்டின் அரை வாசியாக இருக்கும் அதேவேளை **C** கம்பித்துண்டு **B** கம்பித்துண்டின் அரைவாசியாகும். **C** யின் உயரம் **6cm** எனின் **A**யின் உயரம் யாது?

1. 18cm 2. 30cm 3. 24cm

* டிலுக்சன் **A** என்ற இடத்திலிருந்து வடக்கு நோக்கி **200m** பயணித்தான். பின் அங்கு நின்று வலது பக்கம் திரும்பி **500m** நடந்தான் மீண்டும் இடது பக்கம் திரும்பி **100m** நடந்தான்.

30. இறுதியாக அவன் பயணித்த திசை யாது?

1. மேற்கு 2. தெற்கு 3. வடக்கு

31. இறுதியாகப் பயணித்து முடித்த இடத்திலிருந்து பயணம் ஆரம்பித்த இடத்தை நோக்கிப்பார்த்தால் அது அமைந்துள்ள திசை யாது?

1. வடமேற்கு 2. தென்மேற்கு 3. தென்கிழக்கு

32. பை ஒன்றில் மஞ்சள் நிற மாபிள்கள் 5தும், நீல நிற மாபிள்கள் 4கும், பச்சை நிற மாபிள்கள் 3 றும் இருந்தன. பச்சை நிற மாபிள் ஒன்றை நிச்சயமாக எடுப்பதற்கு முயற்சிக்க வேண்டிய தடவைகளின் எண்ணிக்கை யாது?

1. 7 2. 10 3. **9**

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| லு | 4 | 1 | 6 | மு | ல | மூ | 2 | ம | ம | ப | ல | 1 | 3 | 4 |
| 3 | ப | லு | 3 | 4 | 1 | ம | 4 | ப | ல | 3 | 7 | 4 | பு | 1 |


* மேலே உள்ள கட்டமைப்பபைக் கொண்டு இரு வினாக்களுக்கும் விடையைத் தெரிவு செய்க?

33. இங்கு தரப்பட்டுள்ள 'ம' எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?

1. 3 2. 5 3. 4

34. இங்குள்ள ஒற்றை எண்களின் கூட்டுத் தொகை யாது?

1. 25 2. 23 3. 30

35. 


தரப்பட்டுள்ள உருவின் உள்ளே உள்ள கோணங்களில் **'A'** யினால் காட்டப்பட்ட கோணம் எது?

1. செங்கோணம்
2. கூர்கோணம்
3. விரிகோணம்

* **4 * 3 = 6#6** இங்கு நியம கணித செய்கைகளுக்காக *, # என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன.


36. * என்ற குறியீடானது எதற்கு பயன்படுகின்றது.

1. கூட்டல் 2. கழித்தல் 3. பெருக்கல்

37. # என்ற குறியீடானது எதற்கு பயன்படுகின்றது.

1. கூட்டல் 2. கழித்தல் 3. பெருக்கல்

ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்கள் விரும்பும் பழங்களின் விபரம் இங்கு காட்டப்பட்டுள்ளது.




**A** - தோடம்பழத்தை விரும்புவோர்
**B** - அப்பிள் பழத்தை விரும்புவோர்
**C** - மாம்பழத்தை விரும்புவோர்

38. அப்பிள் பழத்தையும் மாம்பழத்தையும் மாத்திரம் விரும்பக்கூடியவர்களை காட்டும் எழுத்து.

1. E 2. G 3. F

39. மூன்று பழங்களையும் விரும்பக்கூடிய மாணவரை குறிக்கும் எழுத்து.

1. E 2. F 3. G

40. சதுரவடிவக் காணியைச் சுற்றி 56 தூண்கள் நடப்பட்டுள்ளன. ஒரு பக்கம் நின்று பார்க்கும் போது தெரியும் தூண்களின் எண்ணிக்கை யாது?

1. 13 2. 15 3. 17

# புலமைக்கதிர்

## மாதிரி வினாத்தாள்- 2020

5

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்காகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-2020

1

**பத்திரம் II**

பெயர் :............................................

1மணி 15நிமிடம்

01. பின்வரும் பந்தியை நன்றாக வாசித்து வினாக்களுக்கு விடை தருக?

ஓரளவு வெப்பமுள்ள ஈரலிப்பான மலைப்பிரதேசங்களில் தேயிலை செழிப்பாக வளரும். இது பல நூறு ஏக்கர் நிலப்பரப்பில் நிரை நிரையாக வளர்க்கப்படும். இதனால் அப்பிரதேசம் பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் பசுமை நிறைந்து அழகாகக் காட்சி தரும்.

i. பந்தியில் விபரிக்கப்படும் செடி எது? ..................................................

ii. இங்கு இடம் பெறும் உவமானம் யாது? ..................................................

iii. "குன்று" என்பதன் ஒத்தக்கருத்துச் சொல்லை எழுதுக?

..................................................

iv. அளவான சூடு என்பதைக் குறிக்கும் சொற்றொடர் யாது?

..................................................

v. "உலர்ந்த" என்பதன் எதிர்க்கருத்துச் சொல் யாது?

..................................................

vi. பந்தியிலுள்ள அடுக்கு மொழிச் சொல்லைத் தருக?

..................................................

02. பின்வரும் சொற்களைக் கொண்டு கீழே தரப்பட்டுள் வெற்றிடங்களை நிரப்புக

(பாடுவோம், காகம், பென்சில்கள், பெரிய, நாங்கள், உயர)

1. அஃறிணை ஒருமைப் பெயர்ச் சொல் ..................................................
2. தன்மை பன்மை வினைச் சொல் ..................................................
3. வினை அடை மொழி ஒன்று ..................................................

03. பின்வரும் தொடர்மொழி குறிக்கும் தனிச்சொல்லை எழுதுக?

1. ஒன்றைப் போல் இருக்கும் மற்றொன்று : ..................................................

**04.** பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?

1. சின்னத்தம்பிப் புலவர் வாழ்ந்த ஊர் எது?

..........................................................................................................................................

2. அந்தரேயின் கேள்விக்குப் பதிலளிக்காது ஒற்றன் ஏன் தன் நாட்டிற்கு ஓடினான்?

..........................................................................................................................................

3. சந்தைக்கு எப்படிச் செல்வேன் எனப் பவளக்கொடி கற்பனை செய்தாள்?

..........................................................................................................................................

**05.** தொடக்கத்தில் தரப்பட்டுள்ள சொல்லின் ஒத்த கருத்துச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக?

1. சம்பளம் :- பணம் / ஊதியம் / பொறுமை
2. சுகம் :- நலம் / நன்மை / தூக்கம்
03. வரலாறு :- உண்மை / புராதனம் / சரித்திரம்

**06.** சரியாக எழுதப்பட்டுள்ள சொல்லின் கீழ் கோடிடுக?

1. இயக்குநர் / இயக்குனர் / இயக்குணர் 2. செய்நன்றி / செய்ந்நன்றி / செய்ந்நன்றி

**07.** கீழ்காலும் சுழியும் அமைந்த சொல்லின் கீழ் கோடிடுக?

1. தும்பி / பூங்கா / கானகம் / கோயில்

**08.** பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுக.

எனக்கு நீலம் பச்சை நிறப் பலூன்கள் வேண்டும்

**09.** அடைப்பினுள் தரப்பட்ட சொற்களை மட்டும் பயன்படுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக? (ஐந்து சொற்களாவது இருத்தல் வேண்டும்)

| | | | |
|---|---|---|---|
| ஒரு | நடைபெறும் | இங்கு | தடவை |
| ஆடி | ஆண்டுக்கு | மாதத்தில் | எசல பெரஹறா |

..........................................................................................................................................

**10.** அ. மானின் ஆண் பெண் மரபுப்பெயர்களை எழுதுக?

ஆண் :- .................................................. பெண் :- ..................................................

**ஆ.** வாகைசூடுதல் எனும் மரபுத்தொடரின் கருத்தைத் தருக?

..........................................................................................................................................

**11.** ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலப் பெயரை எழுத்துக்களில் எழுதுக?

1. 3 ..................................................

2.  ..................................................

**12.** பின்வரும் ஆங்கில வாக்கியங்களுக்கு அடைப்பினுள் இருந்து விடையைத் தெரிவு செய்க?

1. What...................(is / are) this?
2. May I ...................(go / going to office.

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

13. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி, ஆங்கில எழுத்துக்களில் எழுதுக?,

1. இங்கே வாருங்கள் ..........................................................................................................

14. அ) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக?

1. தங்கை இருக்கிறார். ..........................................................................................................

2. எனக்குத் தண்ணீர் வேண்டும் ..........................................................................................

ஆ) பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக?

மேசய யட்ட போலய தியெனவா.

..........................................................................................................................................

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக?

15. எழுத்தில் எழுதுக.

90909

..........................................................................................................................................

16. தரப்பட்ட எண்களில் 12இன் மடங்குகளை எழுதுக.

| |
|---|
| 24, 42, 60 34,<br>48, 36, 22 |

..........................................................................................................

17. 1. (xi + v) இன் பெறுமதியை உரோம எண்ணில் எழுதுக.

..........................................................................................................................

2. மிகப்பெரிய ஓரிலக்க எண்ணை உரோம எண்ணில் எழுதுக.

..........................................................................................................................


18. எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் முறையே எழுதுக?

4620, 4612, 4604, ........................................, ....................................

19. பிற்பகல் 3:45 மணிக்கு வவுனியாவில் இருந்து புறப்பட்ட புகைவண்டி 1 மணித்தியாலம் 20 நிமிடங்கள் பயணம் செய்து கிளிநொச்சியை அடைந்தது. இப்புகைவண்டி கிளிநொச்சியை அடைந்த நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டப்படும் விதத்தை இலக்கத்தில் எழுதுக.

..........................................................................................................................

20. இவ்வுருவில் 0.7ஐ நிழற்றுக.



21. ஒரு பப்பாசிப்பழத்தின் அண்ணளவான நிறை **1kg 50g** எனின் 3 பப்பாசிப்பழங்களின் நிறையை **kg, g** ல் தருக?

..........................................................................................................................

22. ஒரு பாடசாலையில் தரம் 1–5 வரையான வகுப்புக்களில் 480 மாணவர்கள் கற்கிறார்கள். ஒரு வகுப்பில் 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் எனின் அப்பாடசாலைக்குத் தேவையான ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

23. 2020ம் ஆண்டின் ஆவணி மாதத்தில் மேனுஜனின் வயது 10 வருடங்கள் 5 மாதங்களும் ஆகும். லதீஸின் வயது 9 வருடங்கள் 8 மாதங்கள் எனின் இருவரது வயதுகளின் கூட்டுத்தொகை யாது? ..............................................................................................

24. பதினைந்தாவது ஒற்றை எண்ணிற்கும் ஏழாவது ஒற்றை எண்ணிற்கும் இடையேயான வித்தியாசம் யாது? ..............................................................................................

25. விலைப்பட்டியலை அவதானித்து விடை தருக.

| பொருள் | விலை |
|---|---|
| **1kg** சீனி | 90.00 |
| **1kg** பருப்பு | 120.00 |
| **1kg** தேயிலை | 540.00 |

**100g** தேயிலையும் $^1/_2$ **kg** பருப்பும் வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?


..............................................................

26. 1. வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் வரையான தூரம் யாது?


..............................................................

2. கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் வரையான தூரம் யாது?

..............................................................




27. வ/சேனைப்புலவு உமையாள் வித்தியாலய மாணவர்கள் பாடசாலைக்கு வருகின்ற விதம் அருகேயுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது.




1. மோட்டார் சைக்கிளின் மூலம் வருவோர் எத்தனை பேர்? ..............................................

2. முச்சக்கரவண்டியிலும் பார்க்க எத்தனை மாணவர்கள் கூடுதலாக நடந்து வருகிறார்கள்? ..............................................

3. 30 மாணவர்கள் பஸ்ஸின் மூலம் வருகின்றார்கள் அதனை உரிய வரைபில் நிழற்றிக் காட்டுக.


4. அன்றைய தினம் பாடசாலைக்கு வந்தோர் எத்தனை பேர்? ..................................

28. 791 புத்தகங்களை ஒருவருக்கு 7 புத்தகங்கள் வீதம் எத்தனை பேருக்கு பகிர்ந்து கொடுக்கலாம்?

..............................................................................................

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

**29.**




A B

**1. பாத்திரம் Aயில் உள்ள நீரின் அளவை மில்லிலீற்றரில் எழுதுக.**

.....................................................................................................

**2. பாத்திரம் A ஐ பாத்திரம் B ஆல் நிரப்ப எத்தனை தடவைகள் ஊற்ற வேண்டும்** .....................................................................................

*** 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30. நாய் மூலம் பரவும் நோய் எது?**

1. பிளேக் 2. நீர்வெறுப்புநோய் 3. சிக்குன்குன்யா

**31. இலங்கையின் திருகோணமலையின் கொட்டியாரக்குடாவின் கடலுடன் கலக்கும் ஆறு எது?**

1. மகாவலிகங்கை 2. ஜின்கங்கை 3. கதம்பநதி

**32. வெடித்துப் பரம்பலடையும் வித்து**

1. புலிநகம் 2. கடல்மா 3. காசித்தும்பை

**33. "கஸ்பர் வீல்" பயன்படுத்தப்படும் உபகரணமானது?**

1. சைக்கிள் 2. மோட்டார் சைக்கிள் 3. தையல் இயந்திரம்

**34. குறித்த காலத்தில் மட்டும் பூக்கும் தாவரம்?**

1. கமுகு 2. தென்னை 3. புளி

**35. புத்தகங்களைச் சேதப்படுத்தாத பிராணி எது?**

1. இராமபாணம் 2. கறையான் 3. கரப்பான்பூச்சி

**36. முளைப்பதற்கு அதிக நாட்கள் எடுக்கும் வித்து?**

1. பாகல் 2. தேங்காய் 3. நெல்

**37.**

| **கிட்டிப்புள்ளும் பம்பரமும்** |
|---|
| **கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு** |

**இப்பாடலுடன் தொடர்புடைய விளையாட்டு?**

1. கிட்டியடித்தல் 2. கோலாட்டம் 3. கொம்பு

**38. ஒவ்வொருவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டிய பழக்க வழக்கங்களில் ஒன்று**

1. உண்மை பேசுதல் 2. மன்னிக்கும் பக்குவம் 3. பொறாமை கொள்ளுதல்


**39. மழைவரப்போவதை உணர்த்தும் செயற்பாடாக அமைவது**

1. நரி ஊளையிடுதல்
2. சேவல் கூவுதல்
3. எறும்புகள் முட்டை கொண்டு திட்டை ஏறுதல்

**40. தச்சு வேலைக்கான உபகரணத் தொகுதி**

1. சீவுளி – துறப்பணம் 2. நுகத்தடி – பரப்புப்பலகை 3. நீர்மட்டம் – சம்மட்டி


**41.**



**அருகே உள்ள நிழலுரு மூலம் காட்டப்படும் பறவை எது?**

1. கிளி 2. பருந்து 3. புறா

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

42. 

இக்குறியீடு காணப்படும் இடம் எது?

1. பாடசாலை நுழைவாயில்
2. மலசலகூடம்
3. நூலகஅறை

43. பச்சை வர்ணத்தைப் பெறுவதற்கு மஞ்சள் வர்ணத்துடன் சேர்க்கவேண்டிய வர்ணம்?

1. சிவப்பு 2. நீலம் 3. கறுப்பு

44. செதுக்கல் வகை ஆக்கங்கள் செய்யப் பொருத்தமற்றது?

1. கடதாசி 2. களிமண் 3. கருங்கல்

45. சுவட்டு நிகழ்ச்சியாகக் கருதப்படுவது?

1. உயரம் பாய்தல் 2. தட்டெறிதல் 3. 100m ஓட்டம்

46. நீரைப் பயன்படுத்தி இசை எழுப்பும் கருவி எது?

1. ஜலதரங்கம் 2. மகுடி 3. புல்லாங்குழல்

47. 56. சந்திரன் வானில் முழுமையாகத் தெரியும் நாள்

1. அமாவாசை 2.பூர்வபக்க அட்டமி 3. பூரணை

48. பாடசாலையின் கடந்தகாலம் பற்றி அறிய உதவும் ஆவணம் எது?

1. வரவு இடாப்பு 2. பாடப்பதிவு 3. சம்பவத்திரட்டுப் புத்தகம்

49. ஈர்க்கு, தடி, ஆணிகள், மீன்ரின்பேணி ஆகியன கொண்டு ஆக்கக்கூடியபொருள் எது?

1. விளக்குமாறு 2. தும்புத்தடி 3. தூசுதுடைப்பம்

50. 

இவ் உபகரணம் (கைவில்லை) பயன்படுத்தப்படுவது?

1. எழுத்துக்களை உருப்பெருத்துப் பார்ப்பதற்கு
2. சிறிய எழுத்துக்களை அழிப்பதற
3. வைரஸ்கிருமிகளை அழிப்பதற்கு

51. மஞ்சள் நிறமான காய்கறிகள், பழங்களில் காணப்படும் உயிர்சத்து எது?

1. உயிர்சத்து B 2. உயிர்சத்து C 3. உயிர்சத்து E

52. 2020ம் ஆண்டு ஒரு

1. சாதாரண வருடம் 2. நெட்டாண்டு அல்ல 3. லீப்வருடம்

53. அரசாங்க தகவல்களைப் பெற அழைக்க வேண்டிய தொலைபேசி எண்?

1. 1919 2. 1929 3. 1939

54. உணவை உறிஞ்சிக் குடிக்கும் பிராணி

1. சிங்கம் 2. பல்லி 3. தேனீ

55. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள செந்நிறக்கோள் எது?


1. சனி 2. செவ்வாய் 3. வியாழன்

* பின்வரும் படங்களுடன் தொடர்புடைய வினாக்களுக்கு அவற்றின் இலக்கங்களைச் சரியாகப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக?

1


2


3


4


56. இலங்கையின் தேசிய பறவையாக அமைவது ......................................

57. அவுஸ்ரேலிய நாட்டின் தேசிய விலங்கு எது? ......................................

58. சீனாவில் இடம் பெற்ற ஒலிம்பிக் போட்டியில் இதனைச் சின்னமாகக் கொண்டு வரையப்பட்டது?

......................................

59. இலங்கையில் அரிதாகிவரும் இலங்கைக்கே உரிய பிராணி எது? ......................................

60. கீழ்வரும் காட்சிப்படத்தைக் கொண்டு நிகழ்கால வாக்கியங்கள் மூன்று எழுதுக? (ஒவ் வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்குக் குறையாத சொற்கள் இடம் பெறுவதுடன் எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இடம்பெறுதல் வேண்டும்.)



1. ......................................................................................................................
......................................................................................................................

2.......................................................................................................................
......................................................................................................................

3.......................................................................................................................
......................................................................................................................

- நன்றி -

- வீட்டிலிருந்து சுயமாகக் கற்றுப் பயன் பெறுக -

திரு. க. சந்திரகுமார் . --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---